Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை.

மலர் I.] 1941-ம் ௵ மே௴ 16உ, வெள்ளிக்கிழமை. [இதழ் 9.

## வாரச் செய்திக் குறிப்புகள்.

### 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும், இதர இடங்களிலும் ஆகாய விமானப் போர்.

சென்ற வாரம், ஜெர்மனியின் முக்கியமான பட்டணங்கள் மீது, பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை பல தடவை வெடிகுண்டுகளைப் போட்டது. பிரெஸ்ட் என்ற துறைமுகத்தில் தங்கியிருக்கும் "ஷார்ன் ஹார்ஸ்ட்," "நீசனே" என்ற ஜெர்மனியின் இரண்டு மாபெரும் யுத்தக் கப்பல்கள்மேல் நேராக வெடிகுண்டுகள் விழுந்தன. ஊடுருவிச் செல்லும் வெடிகுண்டுகள் கப்பல்களின்மேல் தாக்கியது ஆகாய விமானத்தின் மேலிருந்து நன்றாகத் தெரிந்தது என்று பிரிட்டிஷ் மந்திரி சபை அறிக்கை கூறுகிறது. யுத்தக் கப்பல்களுக்கு மாத்திரமல்லாமல், கப்பற் படைத்தளத்துக்கும் பெருத்த சேதம் விளைவிக்கப் பட்டது.

செயிண்ட் நாசேர் என்ற சப்மரீன் தளம் தாக்கப் பட்டது ; அதன் பயனாக, பெருநெருப்புகள் அங்கே பல இடங்களில் உண்டான.

வட மேற்கு ஜெர்மனி பட்டணங்கள் மேல் வெடி குண்டுகள் போடப்பட்டன.

ஹாம்பர்க் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டது. சுமார் 400 பிரிட்டிஷ் விமானங்கள் இந்தத் தாக்குதலில் கலந்துகொண்டன ; பிரெமென் என்ற முக்கிய பட்டணமும் தாக்கப்பட்டது. ஜெர்மனியினுடைய சப்மரீன் தளங்களும், கப்பல் கட்டும் சாலைகளும், இடைவிடாமல் தாக்கப்பட்டன. பல இடங்களில் நெருப்புப்பற்றிக்கொண்டு எரிந்தது. எங்கு பார்த்தாலும் ஒரே புகையும் நெருப்புமாயிருந்த தென்று ஒரு பிரிட்டிஷ் விமான ஓட்டி கூறுகிறார்.

நல்ல நிலா வெளிச்சத்தில், பிரிட்டிஷ் விமான வெடிகுண்டு படை பவனிபோவதுபோல, அடிக்கடி சென்று, வட்டமிட்டு, குறிப்பிட்ட லட்சியங்களின் மேல் கட்டுகட்டாக வெடிகுண்டுகளைப் போட்டது. 10,000-க் கணக்கான அக்கினி குண்டுகளும், நூற்றுக்கணக்கான டன் எடையுள்ள வெடிகுண்டுகளும், ஹாம்பர்க் மேலும், பிரெமென் மேலும் போடப்பட்டன.

பர்லின், எம்டன், ராட்டர்டம், இதர ராணுவத் தளங்கள் முதலியவைகளும் விமானப்படையால் தாக்கப்பட்டன.

தொழிற்சாலைப் பிரதேசங்களாகிய மான்ஹீம், லட்விக் ஷேபன் என்ற இரண்டு இடங்களும் பலமாகத் தாக்கப்பட்டன. இந்த இரண்டு பட்டணங்களும் ரைன் நதியால் பிரிக்கப்பட்டிருந்தாலும், உண்மையில் இவைகள் ஒரேபட்டணம்தான் என்று சொல்லலாம். மேற்கு ஜெர்மனியில் இவைகள் முக்கியமான விமான லட்சியங்கள். மான்ஹீம் என்பது ஜெர்மனியின் மிகப்பெரிய நதிக்கரைத் துறைமுகங்களில் ஒன்று ; ரயில்வேயின் முக்கிய ஸ்தானமுமாகும். இதல்லாமல், இந்தப்பட்டணம் பல கைத் தொழிற்சாலைகளையுடையது. லட்விக்ஷேபன் என்ற பட்டணத்தின் வடபாகம் முழுவதும், உலகத்திலேயே பெரிய ரசாயனக் கைத்தொழிற்சாலைகளில் ஒன்றைக் கொண்டிருக்கிறது. நிலா வெளிச்சத்தில், இந்த இரண்டு பட்டணங்களும் நன்றாய்த் தெரிந்தன. பிரிட்டிஷ் விமானங்கள் போட்ட வெடிகுண்டுகள் ரைன் நதியின் இரு கரையிலும் விழுந்து, இந்த இரண்டு பட்டணங்களுக்குப் பலத்த சேதம் விளைவித்தன. இந்தச் சேதம் முக்கியமாக அக்கினி குண்டுகளால்தான் உண்டாக்கப்பட்டது. ஒரு விமான ஓட்டி மேலிருந்து பார்த்ததில் 27 பெரு நெருப்புகளை எண்ணிக் கணக்கிட்டிருக்கிறார். ஒரு போலிஷ் விமானப்படையும் இந்தத் தாக்குதலில் கலந்துகொண்டிருக்கிறது.

சென்ற வாரம், ஜெர்மனியின் ஆதிக்கத்துக்குட்பட்ட பல நாடுகளின்மேல், பிரிட்டிஷ் விமானப்படை வெடிகுண்டுகளைப்போட்டது. கலே, ஆஸ்டெண்டு, ஹாலந்து கரையோரப் பட்டணங்கள், முதலியன தாக்கப்பட்டன.

சென்றவாரத்தில், ஜெர்மன் விமானப்படை லண்டனைப் பலமாகத் தாக்கியிருக்கிறது. பிரிட்டிஷ பார்லிமெண்டு சபைக்கட்டடங்கள், வெஸ்ட்மின்ஸ்டர் அபே என்ற பெரியமாதா கோவில், பிரிட்டிஷ் பொருட் காட்சிச்சாலை ('மியூசியம்') முதலியன வெடிகுண்டுகள் பட்டு சில இடங்களில் சேதமடைந்தன. பார்லிமெண்டில், 1,000 வருஷகாலமாகப் பேர்போன விவாத மண்டபம் தகர்க்கப்பட்டது. இனிமேல் அதைச் சீர்திருத்தி முழுவதும் கட்டினாலொழிய, விவாதத்திற்கு அது உபயோகப்படாது என்று சொல்லப்படுகிறது. லார்டு சபையில் வசித்துவந்த தணிக்கைபார்க்கும் காவல்காரரும், இன்னும் மூன்று பேரும், நெருப்பணைக்கும் வேலையில் உதவிசெய்துக்கொண்டிருக்கும்போது உயிரிழந்தார்கள்.

பார்லிமெண்டு சபைக்கட்டடத்தின் கோபுரத்திலிருக்கும் 'பிக்பென்' என்ற பெரிய கடியாரம் வெடிகுண்டினால் தாக்கப்பட்டது. ஆனால் கடியாரத்துக்கு மேலுள்ள கட்டடம் பழுதாய்விட்டதே ஒழிய, கடியாரத்துக்குச் சேதம் ஏற்படவில்லை. 'பிக்பென்' கடியாரம் சரியாக மணியடித்துக்கொண்டு வருகிறது. அதனுடைய மணிச்சத்தம் லண்டன் 'ரேடியோ' மூலம் உலகமெங்கும் பரப்பப்படுகிறது.

லண்டனில் ஜெர்மன் விமானங்கள் குண்டு போட்டதினால், 5 ஆஸ்பத்திரிகளும், ஒரு ஓட்டலும், சினிமா கட்டடமும், மாதா கோவில்களும், சேதப்பட்டன.

ஆனால், இந்தத் தாக்குதலின்போது 33 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. பிரிட்டிஷ விமானங்கள் சுட்டதனால் 31-ம், விமான எதிர்ப்புப் பீரங்கிகள் சுட்டதனால் 2-ம் ஆக அழிக்கப்பட்ட ஜெர்மன் விமானங்கள் 33. இந்த மாதம் முதல் தேதியிலிருந்து, இதைச்சேர்த்து வீழ்த்தப்பட்ட மொத்த ஜெர்மன் விமானங்கள் 124. ஒவ்வொரு ஜெர்மன் விமானத்திலும் ஐந்து பேர் இருந்தார்கள் என்று கணக்கிட்டால் சுமார் 600 பயிற்சிபெற்ற ஜெர்மானியர்கள் உயிரிழந்திருக்கவேண்டும். பார்லிமெண்டு சபையைத்தாக்கிய தினத்தில் மாத்திரம் சுமார் 160 ஜெர்மானியர் உயிரிழந்திருக்கவேண்டும்.

நிலா வெளிச்சத்தில் லண்டனைத் தாக்கிய எதிரி விமானங்கள் முதலில் அக்கினிக்குண்டுகளை வீசின பின்பு பெரிய வெடிகுண்டுகளைப் போட்டன. எதிரி விமானங்கள் கீழாகப்பறந்து சென்றன ; லண்டன் எல்லைப்புறத்திலுள்ள வீடுகளில் பல சேதப்படுத்தப்பட்டன. பல இடங்களில் நெருப்புப் பிடித்துக் கொண்டது. நெருப்பணைக்கும் சிப்பந்திகள் மும்முரமாக வேலை செய்தார்கள். ஒரு பிரதேசத்தில் உள்ள தெருக்களில் பிடித்த நெருப்பு வெளிச்சம், இரவைப் பகலாக்கிவிட்டது என்று ராய்ட்டர் நிருபர் வர்ணிக்கிறார்.

வெடி குண்டுகளால் தாக்கப்பட்டுச் சேதமடைந்த வெஸ்ட் மின்ஸ்டர் ஹால் தூண்களால் தாங்கப்படாத

மேல்தளமுடைய ஹால் என்றும், உலகத்திலேயே அவ்வளவு பெரிய ஹால் கிடையாதென்றும் சொல்லப்படுகிறது. இதை 109·-ம் வருஷத்தில், கட்ட ஆரம்பித்தவர் வில்லியம் ரூபஸ் என்பவர்.

பிரிட்டிஷ் பொருட்காட்சிச் சாலையின்மேல் போட்ட அக்கினிக்குண்டுகள், மேல்தளத்தைத் துளைத்துக் கொண்டு உள்சென்று கட்டடத்தின் பின்பாகத்தைத் தீ மூட்டியாக்கின. நெருப்பணைப்பவர்கள் எவ்வளவோ முயற்சிசெய்தும், சில பாகங்களில் தீப்பிடித்துக்கொண்டு சேதம் உண்டாக்கியது. ஆனால் நல்லகாலமாக, அருமையானதும், விலையுயர்ந்ததுமான பொருள்களெல்லாம், பொருட்காட்சிச் சாலையிலிருந்து முன்னமேயே எடுக்கப்பட்டு ஒரு பத்திரமான இடத்துக்குக் கொண்டு போகப்பட்டன. இதனால், உண்மையில் உண்டான சேதம் மிகவும் கொஞ்சம் தான்.

தெற்கு இங்கிலாந்தில் போய்க் கொண்டேயிருக்கும் பிரயாணிகள்—ரயில் வண்டியை ஒரு ஜெர்மன் விமானம் தாக்கியது எஞ்ஜின் 'டிரைவரும்,' 'பயர்மேனும்' காயமடைந்தார்கள். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனபிறகு, டிரைவர் உயிரிழந்தார்.

லீட்சில் பேசியபோது, தொழில் மந்திரி, மிஸ்டர் எர்னஸ்ட் பெவின், ஜெர்மன் விமானத் தாக்குதலைப்பற்றிக் குறிப்பிட்டார். அவர் கூறியதாவது:—எதிரியின் இராக்காலப்படையெடுப்பைச் சமாளிப்பதில் நாம் பெரிதும் முன்னேற்றமடைந்து விட்டோம். நாம் ஜெயித்துக்கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு மணி நேரமும், நாம் ஜெயித்துக் கொண்டு வருகிறோம். ஜெர்மன் விமான இரவுப் படையெடுப்பு ஹிட்லருக்கு அதிகச் செலவை உண்டாக்கியிருக்கிறது. மிஸ்டர் பெவின் கூறியதின் பொருள் என்னவென்றால், பிரிட்டனில் ஏராளமான ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டு விடுகின்றன என்பதுதான்.

கடைசியாக வந்த செய்திகளிலிருந்து, பிரிட்டிஷ் விமானப்படை ஹெலிகோலாந்தைத் தாக்கியதென்றும், ஹாலந்து, பிரான்சு, செயிண்ட் நாசேர் முதலிய இடங்களில் வெடிகுண்டுகளைப் போட்டதென்றும், செயிண்ட் நாசேரின் கப்பற் சாலையில் உள்ள 12,000 டன் 'சப்ளை' கப்பல் தாக்கப்பட்டு நெருப்புக் கிரையாயிற்றென்றும், உஷாந்து என்ற இடத்தில் 2,000 டன் எடையுள்ள மற்றொரு 'சப்ளை' கப்பல் தாக்கப்பட்டு முழுகடிக்கப்பட்டதென்றும் தெரிகிறது.

நிலா வெளிச்சம் நாள்தோறும் குறைந்து கொண்டே வருவதால், பிரிட்டன்மேல் ஜெர்மன் விமானத்தாக்குதலும் குறைந்துகொண்டு வருகிறது.

பிரசித்திபெற்ற வெஸ்ட் மின்ஸ்டர் பள்ளிக்கூடம் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டது. பள்ளிக்கூட மாணவர்கள் தூங்கும் இடம், பள்ளிக்கூடத்தின் பெரிய அறை, புத்தகசாலை முதலியவை சேதமடைந்தன.

மேன்மைதங்கிய அரசர்பிரானும் அரசியும், வெடிகுண்டுகளால் தாக்கப்பட்ட வெஸ்ட் மின்ஸ்டர் மாதா கோவிலைப் பார்வையிட்டார்கள். நான்கு வருஷங்களுக்கு முன் பட்டாபிஷேகம் நடந்த இடம், இப்போது இடிந்து சேதமடைந்திருப்பதைப் பார்த்தார்கள். பார்லிமெண்டு சபைக்குச் சென்று, சபைத் தலைவர் பிரவேசிக்கும் இடத்திற்கருகில் நின்று, வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டு இடிந்து விழுந்த விவாத மண்டபத்தைக் கண்டார்கள்.

### 2. ஆப்பிரிக்காவும், மத்திய தரைக்கடலும்.

வடக்கு ஆப்பிரிக்காவில், பிரிட்டிஷ் துருப்புகள் லிபியாவில் சில வெற்றிகளும், அபிசீனியாவில் சில முன்னேற்றங்களும் அடைந்திருக்கின்றன. தோப்ரூக்கில், பகைவர்களைத் திடீரென்று பிரிட்டிஷ் துருப்புகள் தாக்கி, அவர்களுக்கு அதிக சேதத்தை விளைவித்து, 32 கைதிகளைப் பிடித்திருக்கின்றன. சோலும் பிரதேசத்தில், எதிரிகளுக்குப் பிரிட்டிஷ் துருப்புகள் தொந்தரவு கொடுத்தன; எதிரிகளின் 'டாங்க்'கி ஒன்றைக் கைப்பற்றின. அபிசீனியாவில் அம்பா அலகியின் வடக்கிலிருந்து முன்னேறி, இந்தியத் துருப்புகள் கும்சா என்ற இடத்தைக் கைப்பற்றின; நான்கு பீரங்கிகளும், இதர யுத்த சாமான்களும், பிடித்துக்கொள்ளப்பட்டன. தெற்கு ஆப்பிரிக்கத் துருப்புகள் வடக்கு நோக்கி, அம்பா அலகியைத் தாக்குவதற்காகச் செல்லுகிறார்கள். பென்காசித் துறைமுகம் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டது.

அம்பா அலகிக் கோட்டையின்மேல், பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை வெடிகுண்டுகளைப்போட்டது.

அபிசீனியாவின் தலைநகரில் மீண்டும் சிம்மாசனமேறிய சக்கரவர்த்தி ஹெயிலி செலாசி, பிரிட்டிஷ் முதல் மந்திரி மிஸ்டர் சர்ச்சிலுக்கு, தன்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்து, ஒரு தந்தி அனுப்பியிருக்கிறார். பிரிட்டிஷ் துருப்புகள், தென்னாப்பிரிகா, கிழக்காப்பிரிக்கா, மேற்காப்பிரிக்கா, சூடான், இந்தியா முதலிய நாடுகளிலிருந்து வந்த துருப்புகள, இவைகளெல்லாம், அபிசீனியாவை திருப்பிப் பெற முயற்சி செய்து வெற்றி பெற்றதற்காக, தன்னுடைய நன்றியறிதலான வந்தனத்தையும், தன் நாட்டு மக்களின் வந்தனத்தையும், அபிசீனியச் சக்கரவர்த்தி தெரிவித்திருக்கிறார்.

அபிசீனியச் சக்கரவர்த்தியைப் பாராட்டி, மிஸ்டர் சர்ச்சில் ஒரு பதில் அனுப்பியிருக்கிறார். அதில், அச்சு வல்லரசுகளின் அதிக் கிரமத்தினால் முடியிழந்த மன்னர்களில் முதலாவது சக்கரவர்த்தி ஹெயிலி செலாசிதானென்றும், முதலில் மீண்டும் தன் நாட்டையும் கிரீடத்தையும் அடைந்தது அவர்தானென்றும் கூறியிருக்கிறார்.

சிடி பரானிக்குத் தெற்கு நோக்கிப்போன துருப்புகளில், ராஜபுதன துப்பாக்கிப்படையைச் சேர்ந்த கணபதி ராம் என்ற ஹவில்தார் ஒரு யந்திர பீரங்கியின் உதவி கொண்டு பகைவர்கள் பலரைக் கொன்று, தம்முடைய துருப்புகள் முன்னேறிச் செல்வதற்கு உதவி செய்தார். அவருக்கு இந்தியத் திறமைப் பதக்கம் அளிக்கப்பட்டது.

மத்திய தரைக்கடலில் உள்ள பிரிட்டிஷ் கப்பற்படை, லிபியாவில் உள்ள பகைவர்களுக்கு உணவுப் பொருள், யுத்த சாமானகள் முதலியன போவதை முழுதும் தடுக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் வேலை செய்துவருகிறது. இத்தாலியிலிருந்தும், சிசிலியிலிருந்தும், திரிபோலி, பென்காசி முதலிய பகைவர் ஸ்தானங்களுக்குச் 'சப்ளை' கப்பல்கள் செல்கின்றன. மால்டாவிலிருந்து, பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களும், சப்மரீன்களும் இதை மிகக் கவனமாகப் பார்த்து, தடைசெய்ய முயற்சிக்கின்றன.

சோலும் பிரதேசத்தில் அச்சுத்துருப்புகள் பின்னடைந்து சென்றன; முன்பு சோலும் என்ற இடத்திற்கு கிழக்கிலும் மேற்கிலும் இருந்த இடங்களில், அவைகள் இப்போது இருக்கின்றன; அங்கு பிரிட்டிஷ் துருப்புகள் அவைகளுக்குத் தொந்தரவு கொடுக்கின்றன; தோப்ரூக்கைப் பிரிட்டிஷ் துருப்புகள் தாக்கிக்கொண்டிருக்கின்றன; இரண்டு ஜெர்மன் 'டாங்க்'கிகள் கைப்பற்றப்பட்டு, எதிரிகளுக்கு மிகுந்த சேதம் விளைவிக்கப்பட்டது; அம்பா அலகி யுத்தத்தில் இந்தியச் சிப்பாய்கள் முன்னேறிச் செல்கிறார்கள். லிபியாவில் அச்சுத்துருப்புகள் செய்யும் ஏற்பாட்டினால், கூடிய சீக்கிரம் எகிப்தைத் தாக்கலாம் என்று நம்பப்படுகிறது. பிரிட்டிஷ் விமானங்கள் லிபியாவில் உள்ள அச்சு விமானச்சாலைகள் மேல் ஏராளமான வெடிகுண்டுகளைப் போட்டன. பென்காசியில் ஒரு பெரு நெருப்பு உண்டாயிற்று. கஜாலாவில், எதிரிகளின் ஆகாய விமானங்கள் பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டன. மத்திய தரைக்கடலில் உள்ள பிரிட்டிஷ் கடற்படை பென்காசியைத் தாக்கியது. (மேலே குறித்த விவரங்கள் கடைசியாக வந்த செய்திகளின் சுருக்கம்.)

### 3. அமெரிக்காவும், அட்லாண்டிக்கடலும்.

ஆஸ்திரேலியாவின் முதல் மந்திரி, மிஸ்டர் மென்சிஸ் கனடாவுக்குச் சென்று, அங்கு ஒரு பிரசங்கம் செய்தார். அதில், "நாம் கட்டாயம் இந்த யுத்தத்தில் ஜெயிக்கப் போகிறோம். நான் ஒரு நம்பிக்கையுடன் இதைச் சொல்லவில்லை; பூரண உறுதியுடன்

கூறுகிறேன்" என்று அவர் கூறினர். மேலும் அவர் கூறியதாவது:—"பிரிட்டிஷார்களாகிய நாம் மனோபலமும், ஆத்ம உறுதியும் கொண்டவர்கள்; மனிதர்களும், தைரியமும் நமக்கு இருக்கின்றன. எங்களுக்கு ஆயுதங்கள் கொடுக்கும்படி நாங்கள் உலகத்தைக் கேட்கிறோம். நாம் போராடும் லட்சியம் அமெரிக்காவுடைய லட்சியமும், நாகரீக மடைந்த உலக மக்கள் எல்லோருடைய லட்சியமுமாகும். சாதாரண மனிதனுடைய லட்சியமும் அதுவே. உலகத்தில் மிகத் துக்ககரமான காட்சி லண்டனில் வெடிகுண்டுத் தாக்குதலினல் நெருப்பு ஜுவாலை விட்டெரியும் தெருக்களிலிருந்து ஜனங்கள் செல்வது; மிகச் சந்தோஷப்படும்படியான காட்சி, மறுநாள் காலை அவர்கள் துரிதமாகவேலைக்குச் செல்வது. இவர்கள் சமாதானத்துக்காக யாரையும் கேட்கமாட்டார்கள்; அதற்காகப் போர் புரிந்து அதைப் பெறுவார்கள்."

கனடாவின் சட்ட சபையில், ஆஸ்திரேலியாவின் முதன் மந்திரி பேசினர். "குடியேற்ற நாடுகள் இருக்கும் வரைக்கும், பிரிட்டன் வீழ்ச்சியடையப் போவதில்லை" என்று அவர் கூறியபோது சபையினர் பலத்த ஆரவாரம் செய்தனர்.

சென்ற வாரத்துக்கு முன் மிஸ்டர் ஸ்டிம்சன் ஒரு அருமையான பிரசங்கம் செய்தார். (அதனுடைய விவரத்தை இந்த இதழில் வேறிடத்தில் காணலாம்). அமெரிக்கக் கப்பற்படை, பிரிட்டனுக்கு உணவுப்பொருள்களும், யுத்த சாமான்களும் சேரும் வரையில் உதவி செய்யவேண்டும் என்று அவர் கூறினர். இதன் அர்த்தம் என்னவென்றல், அமெரிக்கா, கடல் யுத்தத்தில் சீக்கிரத்தில் ஈடுபடும் என்பதுதான்.

அகில அமெரிக்க மகாநாட்டில், புதன்கிழமையன்று பிரசிடெண்டு ரூஸ்வெல்ட் ஒரு முக்கியமான பிரசங்கம் செய்வார் என்று அறிவிக்கப்பட்டது. ஆனல் அவர் திடீரென்று அந்த ஏற்பாட்டை ரத்து செய்துவிட்டார். அமெரிக்கப் பொது மக்களின் அபிப்பிராயம், தீவிரமாக கப்பற்படை உதவியைப் பிரிட்டனுக்குக் கொடுக்கவேண்டும் என்பது; பத்திரிகைகளின் தலையங்கங்களிலும், படங்களிலும், வேடிக்கைச் சித்திரங்களிலும் இந்த அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருக்கிறது. ஒரு வேளை, பிரசிடெண்டு ரூஸ்வெல்ட், மிக முக்கியமான காரியங்களை இன்னும் சற்று யோசனைசெய்து முடிவுசெய்யவேண்டும் என்று நினைக்கிறர் போலும்.

மிஸ்டர் வெண்டல் வில்கி பிரிட்டனுக்கு உதவி செய்வதைக் குறித்துச் சென்ற வாரம், நியூயார்க்கில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினர். "அமெரிக்கா அபரிமிதமாகச் செய்யும் யுத்த சாமான்கள் பிரிட்டனுக்குப் போய்ச் சேரும்படி, வேண்டிய உதவியை அமெரிக்கா செய்யுமானல், பிரிட்டன் கட்டாயம் ஜெயிக்கும்" என்று கூறினர். அமெரிக்க சாமான்கள் கொண்டு செல்லும் கப்பல்களைப் பாதுகாக்க, "கான்வாய்" என்ற துணை உதவிக் கப்பல்கள் அனுப்பிப் பாதுகாத்தல், ஆகாய விமானத் துணை அனுப்புதல் முதலிய ஏற்பாடுகளை அமெரிக்கா செய்யவேண்டுமென்று அவர் வற்புறுத்திக் கூறினர்.

அமெரிக்க பிரசிடெண்டின் மனைவி, மிஸஸ் எலீனார் ரூஸ்வெல்ட்டுக்கு ஒரு பயமுறுத்தல் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. அதில் சமாதானத்திற்காக, மறியல் செய்யப்போவதாக எழுதியிருந்தது. மிஸஸ் ரூஸ்வெல்ட், அமெரிக்க அரசாங்கத் தலைவர்கள், அமெரிக்க யுத்த முயற்சியில் ஈடுபட்டவர்கள் முதலியவர்களுக்குத் தகுந்த போலீஸ் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவில் உள்ள பிரிட்டிஷ் ஸ்தானீகர், லார்டு ஹாலிபாக்ஸ், அட்லாண்டிக் கடல் யுத்தத்தைப்பற்றி சென்ற வாரம் பேசியிருக்கிறர். அட்லாண்டிக் யுத்தம் கடற் படை பலத்தினல் தான் முடிவு காணுமென்றும், பிரிட்டனுக்கு இந்த விஷயத்தில் அமெரிக்கா பேருதவி செய்கிறதென்றும் அவர் கூறினர்.

### 4. இராக்.

இராக்கில் பிரிட்டனுக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்த ரஷீத் அலிக்கு விரோதமாக பாக்தாத் மக்கள் கிளர்ச்சி செய்தார்கள்; கிளர்ச்சியின் பிறகு ரஷீத் அலி பாக்தாத் நகரைவிட்டுப் போய்விட்டார்.

ரஷீத் அலியின் துருப்புகள், பிரிட்டிஷ் துருப்புகளின் தாக்குதலின் பயனுகப் பின்வாங்கிச்சென்றன.

ஹெட்சாஸின் அரசர் இபன்சாத், இரான், எகிப்து, துருக்கி, முதலிய நாடுகள், ரஷீத்அலிக்கு யாதொரு உதவியும் அளிக்க மறுத்துவிட்டன.

ரஷீத் அலியின் சமாதானத் திட்டங்கள் துருக்கியின் மத்தியஸ்தத்துக்குக் கொடுக்கப்பட்டன. அந்தத் திட்டங்கள், ஆங்கிலோ—இராக் ஒப்பந்தத்துக்கு விரோதமாகையால் கவனிக்கப்படமாட்டா என்று ஒரு துருக்கிச் செய்தி கூறுகிறது.

ருஷ்யாவுக்கும், துருக்கிக்கும் அரசியல் தொடர்பு ஏற்பட்டதன் காரணம், ருஷ்யா தனக்கருகாமையில் இருக்கும் நாடுகளுடன் சிநேகபாவமாய் இருக்க வேண்டும் என்ற நோக்கம்தான் என்றும், அதனல் ரஷீத் அலியை ஆதரிப்பதாகக் கொள்வதற்கில்லை என்றும் தெரிகிறது. ருஷ்ய ரேடியோ, ரஷீத் அலியின் செய்கையைக் கண்டித்து, ரஷீத் அலியை ஆதரிக்கும் கிளர்ச்சிக்காரர்களை வெளி நாடுகளால் தூண்டப்பட்டவர்கள் என்று கூறுகிறது.

பிரிட்டிஷ் விமானங்கள் இராக்கில் பல இடங்களில் கிளர்ச்சிக்காரர்களைத் தாக்கி விரட்டியிருக்கிறது.

### 5. பால்கன்ஸ்.

காயமடைந்த ஜெர்மானியர்கள் 60,000 பேர் பல்கேரியாவிலும், 10,000 பேர் ருமேனியாவிலும் இருக்கிறர்கள் என்று ஒரு சுயேச்சை பிரெஞ்சு செய்தி கூறுகிறது.

### 6. கப்பல் நிலைமை.

எப்ரல் மாதம் பிரிட்டனுக்கு 106 கப்பல்கள் நஷ்டமாயின. அவைகளின் மொத்த எடை 4,88,124 டன்கள்.

யுத்த முஸ்தீப்புடைய ஜெர்மன் கப்பல் "மஞ்சன்" என்பதை, பிரிட்டிஷ் பாதுகாப்புக் கப்பல் ஒன்று தாக்கி முழுகடித்தது.

சென்ற ஆறு வாரங்களில், முழுகடிக்கபட்ட ஜெர்மன் கப்பல்களின் மொத்த எடை 600,000 டன்கள்.

நேச நாடுகளால் இழக்கப்பட்ட கப்பல்களில் 100-க்கு 80 பாகம் அமெரிக்காவில் செய்யப்படுகின்றன. 5,055,400 டன் மொத்த எடையுள்ள 800 கப்பல்கள் தயார் செய்யப்படுகின்றன.

### 7. ஜப்பானும் சீனவும்.

சீனவின் 34-வது படையின் தளகர்த்தர், ஜெனரல் குங்பிங்பானையும், அவருடைய ராணுவ உத்தியோகஸ்தர்களையும் கைதிகளாகப் பிடித்துவிட்டதாக ஜப்பானியர்கள் கூறுகிறர்கள்.

நான்கு சீன மாகாணங்களில், ஏராளமான சீனத் துருப்புகளுக்கும், ஜப்பானியத் துருப்புகளுக்கும் மும்முரமாகச் சண்டை நடந்துவருகிறது. சேசியாங் மாகாணத்தில் சூகி என்ற இடத்தில் உள்ள இரண்டு சீனப் படைகளைத்தாக்க ஜப்பானியர் ஏற்பாடு செய்திருர்கள். சீனவின் பல பாகத்தில் தனித்தனிச் சண்டைகள் நடந்துவருகின்றன.

அமெரிக்கா ஸ்தானீகர், மிஸ்டர் நெல்சன் ஜான்சன் வேலையைவிட்டு விலகிப்போகும்போது கொடுக்கப்பட்ட ஒரு விருந்தில், சீனவின் தலைவர் மார்ஷல் சியாங்கே ஷேக் பேசினர். "நேச நாடுகள் எங்களுக்கு யுத்த ஆயுதமும், பொருளாதார உதவியும், அனுப்பிக்கொண்டேயிருந்தால் போதும். அவைகளுடைய துருப்புகளும், கடற்படைகளும் எங்களுக்கு அனுப்ப வேண்டியதில்லை. நாங்கள் ஜப்பானை ஒரு கை பார்த்துக்கொள்ளுகிறோம்" என்று சீனத்தலைவர் கூறினர்.

### 8. விஷி.

விஷி அரசாங்கம் ஜெர்மனியுடன் ஒரு முக்கியமான ஒப்பந்தம் செய்துகொண்டது. அதன்படி, ஜெர்மன் 'டாங்க்' கிகளைப் பழுதுபார்க்க, பிரெஞ்சு தொழிற்சாலைகள் உபயோகப்படுத்தப்படும்; சப்மரீன்களைப் பழுதுபார்ப்பதற்கு பிரான்சு உதவவேண்டும்.

அந்த ஒப்பந்தத்தில் ரகசிய ராணுவ ஏற்பாடுகள் இருக்கின்றன என்று தெரிகிறது. அதன்படி, மொராக்கோவிலும், சிரியாவிலும் உள்ள பிரெஞ்சு விமானத்தளங்களை ஜெர்மனி உபயோகப்படுத்தலாம்; விஷி அரசாங்க ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் பிரான்சின் மூலம், ஜெர்மன் துருப்புகளும் சாமான்களும் செல்லலாம்.

### 9. ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாடுகள்.

சர்பியாவிலிருக்கும் ஜெர்மன் துருப்புகள் ஊரைக் கொள்ளையடித்து, சாமான்களைப் பறிமுதல் செய்து கொண்டு வருகின்றன. சர்பியர்கள், இதர நாட்டார்கள், இவர்களின் வீடுகளில் புகுந்து கொள்ளையிட்டார்கள். அமெரிக்க ஸ்தானீகக் காரியாலயத்தால் பிரிட்டிஷ் சொத்துக்கள் அரக்கு முத்திரையிடப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன ; அந்த அரக்கு முத்திரைகளை ஜெர்மானியர்கள் உடைத்தெறிந்து, அந்த சொத்துக்களையும் கொள்ளையிட்டார்கள்.

நார்வேயில், பத்திரிகைகள் ஜெர்மானியர்களுடைய கடுமையான உத்தரவுகளின் கீழ் நடத்தப்படுகின்றன. பிரசுரிக்கப்படக்கூடாத விஷயங்கள் ஒரு பெரிய ஜாப்தாவில் எழுதப்பட்டிருக்கிறது ; அதைப் பத்திரிகாசிரியர்களுக்குப் படித்துக்காட்டுவார்கள் ; ஜெர்மன் அல்லது இத்தாலியின் பிரசுரஅறிவிப்புகள் தவிர வேறு அறிவிப்புகளைப் பிரசுரிக்கக் கூடாது.

ருமேனியாவில், 280 யூதர்கள் பல உத்தியோகங்களிலிருந்து நீக்கப்பட்டார்கள்.

### 10. நடு நிலைமை நாடுகள்.

நார்வே, பெல்ஜியம், யூகோஸ்லாவியா ஆகிய நாடுகள் சுதந்தர நாடுகளல்ல என்ற காரணத்தால் அவைகள் மாஸ்கோவில் வைத்திருந்த ஸ்தானீகர்களை ருஷ்யா ஒத்துக்கொள்ளமுடியாதென்று கூறிவிட்டது.

ருஷ்யாவின் மேற்கெல்லையில் துருப்புகள் சேர்த்து வைத்திருப்பதாகச் சொல்லப்பட்ட வதந்தியைப் பொய் என்று ருஷ்யா கூறுகிறது.

அயர்லாந்து, தனக்கு வேண்டிய உணவுப் பொருள்களுக்கும், ஆயுதங்களுக்கும், அமெரிக்காவுடன் வியாபார முறையில் ஏற்பாடுகள் செய்வதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறது.

ஜெர்மனியின் அயல் நாட்டுமந்திரி, வான் பேபன், துருக்கியின் தலைவர் இனேனுவைச் சந்தித்தார். துருக்கியிடம் ஜெர்மனி எப்போதும் நேசப்பான்மையுடன் இருக்கிறதென்று பேபன் கூறினர்.

**அதிவேகமாகச் செல்லும் பிரிட்டிஷ் 'குரூய்சர்' டாங்க்.**



இம்மாதிரியான டாங்க்குகள் பிரிட்டனில் நூற்றுக்கணக்கில் செய்யப்படுகின்றன.

# இராக் அரசாங்கம் : பழைய சரித்திரமும், புதிய சம்பவங்களும்.

## இந்தியாவின் மேற்குப் பாதுகாப்புக்கொத்தளம்.

இராக் என்ற தேசம் சென்ற யுத்தத்திற்குப் பிறகு புதிதாக ஏற்படுத்தப்பட்டது. துருக்கியின் பழைய மாகாணங்களாகிய மோசூல், பாக்தாத்து, பஸ்ரா, சேர்ந்து புதிய இராக் தேசமாய்விட்டது. இந்த தேசம், அகில தேச சங்கத்தின் ஏற்பாட்டின்படி, பிரிட்டனுடைய மேற்பார்வையிலிருந்து வந்தது. முன்பு, மெசோபடேமியா என்று கூறப்பட்ட பிரதேசம் இராக்கில் அடங்கியிருக்கிறது. இராக்கின் மொத்த விஸ்தீரணம் 116,000 சதுர மைல்கள் ; ஜனத்தொகை 35 லட்சம். அதனுடைய தலைநகரம் பாக்தாத் ; முக்கியமான துறைமுகம் பஸ்ரா. பஸ்ரா என்பது பாரசீகக் குடாக்கடலிலிருந்து, ஷாட் எல் ஆரப் என்ற யூப்ரடீஸ் நதிக்கு 70 மைலுக்கு வடக்கிலுள்ளது. இராக் பெட்ரோல் எண்ணெய்க்குப் பேர்போனது ; மேலும், கிழக்கே போகும் பாதையில் குறுக்கே நிற்கும் நாடு. இந்தக் காரணங்களால்தான் பேராசை பிடித்த அச்சு வல்லரசுகள் இராக்கின்மேல் கண்வைத்திருக்கின்றன ; அங்கு உள்நாட்டுக் கலகங்களை உண்டாக்கிக்கொண்டு வருகின்றன.




Heliozinco., Survey Office, Madras. 1941.

Reg. No. 56/2 Copies 9700

1911–14-ம் வருஷங்களில் ஆட்டோமன் ஆட்சி என்ற துருக்கி ஏகாதிபத்தியத்தின் வலிமை, தூரமாக உள்ள மாகாணங்களில் குறைந்துகொண்டே வந்தது; அராபிய தேசீய உணர்ச்சி அதிகப்பட்டுக் கொண்டுவந்தது. சென்ற 1914-ம் யுத்தத்தில் ஜெர்மனியின் தூண்டுதலின்பேரில் துருக்கி போரில் இறங்கியதும், பிரிட்டன் இராக் பிரதேசத்திலுள்ள அராபியர்களுக்குப் பாதுகாப்பளித்தது. மத சம்பந்தமான யுத்தம் என்று சொல்லி, ஆட்டோமான் அரசாங்கம் அராபிய முஸ்லீம்களிடம் பிரசாரம் செய்தது பிரயோசனமில்லாமற் போய்விட்டது. 1921-ம் வருஷம் நவம்பர் மாதம் துருக்கியர்கள் பஸ்ராவை விட்டுவிட்டுப் போய்விட்டார்கள்.

1922-ம் வருஷம் நவம்பர் மாதம் பிரிட்டிஷ் துருப்புகள் பஸ்ராவில் பிரவேசித்தன. நாட்டு மக்களின் சிநேகிதன் என்ற முறையில் பிரிட்டன் பிரவேசித்ததாக ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது.

பிரிட்டிஷ் துருப்புகள், 1917-ம் வருஷம் மார்ச்சு மாதம் பாக்தாத்திலும், நவம்பர் மாதம் ரமாதி என்ற இடம்வரையிலும், வடக்கு யூப்ரடீஸ் பிரதேசத்திலும், 1918-ம் வருஷம் அக்டோபர் மாதம் மோசூல் பிரதேசம் முழுவதிலும் பிரவேசித்தன.

## ஆங்கிலோ - பிரெஞ்சு அறிக்கை.

1918-ம் வருஷம் நவம்பர் மாதம் 7-ந் தேதி, அதாவது துருக்கி சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்ட 10 நாளைக்குப் பிறகு, பிரிட்டிஷ் அரசாங்கமும், பிரெஞ்சு அரசாங்கமும், அராபிய பிரதேசங்கள் சம்பந்தமாக, ஒரு கூட்டறிக்கை வெளியிட்டன. அதில், நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசீய அரசாங்கத்தை ஏற்படுத்துவதுதான் தங்கள் நோக்கம் என்று அந்த அரசாங்கங்கள் தெரிவித்தன. சிறிது காலத்துக்குப் பிறகு, சர்பர்சி காக்ஸ் இராக்கின் "ஹை கமிஷனரா"யிருக்கும்போது, எல்லா வகுப்பினர்களுமடங்கிய ஒரு அரசாங்க சபை ஏற்படுத்தப்பட்டது. அதனுடைய தலைவர் பாக்தாத்தின் நக்கீட் என்ற மதத்தலைவர்.

1921-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில், குடியேற்ற நாட்டு மந்திரியாயிருந்த மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில், கெய்ரோவில், மத்தியக் கிழக்குப் பிரதேசத்தில் உள்ள பிரிட்டிஷ் பிரதிநிதிகளடங்கிய ஒரு மகாநாடு ('கான்பரன்ஸ்') கூட்டினார். அதன் பயனாக, எந்தெந்த குர்ஷீத் மாகாணங்கள் புதிய இராக் அரசாங்கத்தின்கீழ் இருக்க விரும்புகின்றன என்பதைப் பற்றி ஒரு விசாரணை நடத்தப்பட்டது. சூலைமானியா பிரதேசம் "ஹை கமிஷனரின்" கீழும், இதர குர்ஷித் பிரதேசங்கள் இராக் அரசாங்கத்தின் கீழும், வருவதென்று நிச்சயிக்கப்பட்டது.

## பெய்சால் இராக்கின் அரசராகிறார்.

எமீர் பெய்சால் என்பவர், மெக்காவைச் சேர்ந்த ஹுசேன் அரசனின் குமாரர். இவர், சிரியா பிரதேசத்தைவிட்டு வெளிச்செல்லும்படி பிரெஞ்சு அதிகாரிகள் கேட்டுக்கொண்டபடியால், அங்கிருந்து இராக்குக்கு வந்து சேர்ந்தார். இராக் தேச சிம்மாசனத்திற்குத் தான் ஒரு அபேட்சகராக நிற்பதாக நாட்டு மக்களுக்கு அறிவித்தார். 1921-ம் வருஷம் ஜூலை மாதம் 11-ந் தேதி, மந்திரி சபை, பெய்சாலை இராக்கின் அரசராக்கிவிட்டது. ஆனால் ஒரு நிபந்தனை ஏற்படுத்தப்பட்டது. அரசாங்கம், அரசியல் திட்டத்துக்குக் கீழ்ப்படிந்து, பொதுமக்களின் பிரதிநிதிகள் அடங்கியதாய், குடியாட்சியின் கொள்கையின்படி நடத்தப்படவேண்டும் என்பதுதான் அந்த நிபந்தனை. பொதுமக்களின் அபிப்பிராயத்துக்கு இந்தப் பிரச்சினையை விட்டபோது, 100-க்கு 96 பேர் பெய்சால் அரசராக வரவேண்டுமென்று 'ஓட்'டுக் கொடுத்தார்கள். பெரும்பான்மையான பிரதேசங்களும், மாகாணங்களும், அகிலதேச சங்கச் சட்டவின் ('மாண்டேட்') கீழ், பிரிட்டன் இராக்கை மேற்பார்வை பார்க்கவேண்டுமென்று, அபிப்பிராயம் தெரிவித்தன. 1921-ம் வருஷம், ஆகஸ்ட்டு மாதம், 23-ந் தேதி, பெய்சால் இராக்கின் அரசராக முடி சூட்டப்பட்டார்.

பிரிட்டனுக்கும் ஈராக்குக்கும் உள்ள சம்பந்தம் ஒரு உடன்படிக்கையால் வகுக்கப்பட்டது. அதன்படி, பிரிட்டனின் மேற்பார்வை காலம் 25 வருஷமென்றும் (1925-ம் ஆண்டு டிசம்பர்மீ 16-ந் தேதியிலிருந்து) ஆனல் இராக் எப்போது அகிலதேச சங்கத்தில் அங்கத்தினர் பதவியை அடைகிறதோ, அப்போது அந்த உடன்படிக்கை ரத்தாகிவிடுமென்றும், ஏற்பாடு செய்யப்பட்டது.

1927-ம் வருஷம், இராக் முழுசுதந்தர நாட்டின் தன்மையை அடைந்துவிட்டதாக, பிரிட்டன் கூறிவிட்டது. 1932-ம் வருஷம் இராக் சர்வதேச சங்கத்தில் அங்கத்தினர் பதவியைப் பெற்றது. இராக் சுதந்தர நாடாயிருந்தாலும், பிரிட்டனோடு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது. இராக்கில் ஒரு பிரிட்டிஷ் ராணுவப்படை இருக்கிறது; இராக்கின் போலீஸ் படை பிரிட்டிஷ் இன்ஸ்பெக்டர்கள் தலைமையின்கீழ் நடந்து வருகிறது; இராக்கின் பல இடங்களில் பிரிட்டிஷ் ஆகாய விமானப்படையின் விமானத்தளங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இராக்கின் முக்கியமான எண்ணெய்க்கிணறுகள் மோசூலிலும், கானுக்கின் என்ற இடத்திலும் இருக்கின்றன. ராயல் டச்சுக் கம்பெனியும், ஸ்டாண்டர்டு எண்ணெய்க் கம்பெனியும், கூட்டாக, மோசூல் எண்ணெய்க் கிணறுகளிலிருந்து எண்ணெய் எடுக்கிறார்கள். இரானின் எல்லைக்கருகிலுள்ள கானுக்கின் கிணறுகள், ஆங்கிலோ—இரானியன் எண்ணெய்க் கம்பெனிக்குச் சொந்தம்.

## சமீபத்தில் நடந்த சம்பவங்கள்.

1939-ம் வருஷம் இராக்கின் அரசர் ஒரு மோடார் கார் விபத்தில் உயிரிழந்தார். நான்கு வயதுடைய இரண்டாவது பெய்சால் சிம்மாசனமேறினார். அவர் சிறு குழந்தையாயிருந்ததால், அவருடைய மாமன், எமீர் அப்துல் இல்லா, அரசாங்கத்தை வகித்து அரசாட்சியை நடத்திவந்தார். யுத்தம் ஆரம்பித்ததும், ஒப்பந்தத்தின்படி, இராக் பிரிட்டனோடு சேர்ந்து கொண்டது.

சுமார் ஒருமாதத்திற்கு முன்பு, ரஷீத்அலி என்ற தேசீயத்தலைவர், சில ராணுவத் தலைவர்களுடன் சதியாலோசனை செய்து, அரசாங்கத்தைக் கைப்பற்றிக் கொண்டார். "ரீஜெண்ட்"டாய் இருந்த எமீர் அப்துல் இல்லா நாடு கடத்தப்பட்டார். ஹிட்லருடைய ஆளாகிய ரஷீத்அலி பிரிட்டனுக்கு விரோதமாக நடக்க ஆரம்பித்தார். அங்கிலோ—இராக் ஒப்பந்தத்தின்படி முதலில் பிரிட்டிஷ் துருப்புகள் பஸ்ராவில் இறங்குவதற்கு அனுமதிக்கப்பட்டன; பின்னர் வந்த துருப்புகள் அனுமதிக்கப்படவில்லை. இம்மாதிரி செய்தது ஒப்பந்தத்துக்கு விரோதம். பிரிட்டன் ரஷீத்அலியின் செய்கையை ஆட்சேபித்து, பிரிட்டிஷ் துருப்புகளை பஸ்ராவில் இறங்கும்படி உத்தரவிட்டது. உடனே ஹப்பானியா என்ற பிரிட்டிஷ் விமானச்சாலையைச் சுற்றி, ரஷீத்அலி இராக்கியத் துருப்புகளை நிறுத்தினார். பின்னர் சண்டை நடந்தது. அந்தச் சண்டையில், பிரிட்டிஷ் துருப்புகள் வெற்றியடைந்தன.

## ஹப்பானியாவில் பிரிட்டிஷ் விமானத்தளம்.

பிரிட்டனுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களின் கீழ், இராக்கின் பாதுகாப்பு, பிரிட்டிஷ் விமானப் படைக்கு, முக்கியமாக, ஒப்படைக்கப்பட்டது. ஹப்பானியா என்ற இடம் பிரசித்திபெற்ற பிரிட்டிஷ் விமானச்சாலையாகிவிட்டது. பத்து வருஷங்களுக்கு முன் அது ஒரு பாலைவனம். ஹப்பானியா, பாக்தாதுக்கு 56 மைல் மேற்கே உள்ளது. கிழக்குப் பிரதேசங்களுடன் விமானப் போக்குவரத்துக்கு, ஹப்பானியா விமானச்சாலை மிக முக்கியமாய் இருக்கிறது.

ஹப்பானியா விமானச்சாலையைச் சுடும்படி இராக்கியத் துருப்புகளுக்கு, ரஷீத்அலி இட்ட உத்தரவு, எவ்வளவுதூரம் நன்றியறிதலற்ற காரியம் என்பது சில விஷயங்களால் விளங்கும். பிரிட்டிஷாரின் ராணுவபலம்தான் இராக்கைச் சுதந்தர நாடாக்கியது. பிரிட்டிஷ் அரசியல் நிபுணத்வம், புதிய இராக் அரசாங்கத்தை ஒழுங்குபட அமைத்தது; சுயேச்சையான நாடென்ற அந்தஸ்தைக் கொடுத்தது; அகிலதேசிய சங்கத்தில் 1932-ம் ஆண்டு அங்கத்தினர் ஸ்தானம் பெறுவதற்கு உதவி செய்தது. பிரிட்டிஷ் ராணுவ

உத்தியோகஸ்தர்கள் இராக்கியர்களைச் சிப்பாய்களாக பயிற்சி செய்வித்தார்கள். தன்னைத்தான் பாதுகாத்துக்கொள்ளாத நிலைமையில் இருந்த இராக்கை பிரிட்டன் பாதுகாத்து வந்தது. நீர்ப்பாய்ச்சுத் திட்டத்தை ஏற்படுத்தல், எண்ணெய் வசதிகளைப் பயன்படுத்தல், வியாபாரத்தை அதிகரித்தல் முதலிய உதவிகளைப் பிரிட்டன் இராக்குக்குச் செய்திருக்கிறது. இப்படியெல்லாம் செய்த பிரிட்டனுக்கு விரோதமாக, ஒப்பந்தத்தை உடைத்து, பிரிட்டிஷ் விமானச்சாலையைத் தாக்கியது, திட்டின மரத்தில் கூர் பார்த்ததைப் போலவும், உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்ததைப் போலவும் இருக்கிறது.

## இந்தியாவின் கொத்தளம்.

"இராக்கைத் தாக்குவது இந்தியாவைத் தாக்குவதாகும்" என்பது இந்திய ராணுவ நிபுணர்களின் அபிப்பிராயம். ஏனென்றால், இராக்கை எதிரிகள் பிடித்துவிட்டால், அடுத்தபடியாக இருப்பது இரான். இரானில் நல்ல ஆகாய விமானச்சாலைகளுண்டு. இரானிலிருந்து பலுசிஸ்தானத்துக்குப் போவது கஷ்டமான காரியமல்ல. இராக்கில் செய்த அரசியல் துரோகத்தின் நோக்கம், ஜெர்மனி பஸ்ராவைக் கைப்பற்றவேண்டும் என்பதுதான். பஸ்ராவைப் பிடித்துக்கொண்டால், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகள் அங்கு இறங்குவதற்கு முடியாது. ஆனால் இந்தத் தந்திரத்தை எதிர் பார்த்து, முன்னமேயே பிரிட்டிஷ் துருப்புகள் பஸ்ராவில் வந்திறங்கிவிட்டன. இராக்கைத் தான் கைப்பற்றிக்கொள்ளவேண்டும் என்ற நோக்கம் பிரிட்டனுக்குக் கிடையாது. தன்னிடம் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி இராக் அரசாங்கம் நடந்துகொள்ளவேண்டும் என்பதுதான் பிரிட்டனின் வேலை.

## ஹிட்லருடைய நோக்கம்.

ரஷீத் அலியின் அரசியல் புரட்சிக்கு, ஜெர்மானியர்களும், இத்தாலியர்களும் உதவியளித்தார்கள் என்பதற்குப் பல அறிகுறிகள் காணப்படுகின்றன. ஒரு வருஷத்திற்கு முன்பு, ஜெர்மன் ஸ்தானீகரும், அவருடைய உத்தியோகஸ்தர்களும், பாக்தாத்திலிருந்து போய்விடும்படி கட்டாயப்படுத்தப்பட்டார்கள். ஆனால் இராக் இத்தாலியோடு இருந்த தொடர்பை நீக்கவேயில்லை. இத்தாலியர்கள் மூலமாக அச்சுச் சூழ்ச்சிகளெல்லாம் இராக்கில் நடைபெற்றுவந்தன. பூ தத்துவ ஆராய்ச்சிக்காக வருவதாகப் பாசாங்கு செய்துகொண்டு, ஜெர்மானியர்களும், இத்தாலியர்களும், துருக்கி மார்க்கமாக இராக்குக்கு வந்துகொண்டேயிருந்தார்கள். இராக்கில் இருக்கும் பிரிட்டிஷ் துருப்புகளின் தொகையை ரஷீத்அலி ஜெர்மனிக்கு அறிவித்திருந்ததாகத் தெரிகிறது. பின்பு அதிகமான பிரிட்டிஷ் துருப்புகள் வந்தவுடன் மறுபடியும் அச்செய்தியை அனுப்பியதாகவும், ஜெர்மனி அதை அறிந்து, உடனே பிரிட்டிஷ் துருப்புகளைத் தாக்கும்படி ரஷீத் அலிக்கு உத்தரவிட்டு, தாக்குவதற்காக உதவி அனுப்புவதாகக் கூறியதென்றும், ஜெர்மனியின் தூண்டுகோலின்படி ரஷீத்அலி நடந்தாரென்றும், ஆனால் எதிர்பார்த்த ஜெர்மன் உதவி வரவில்லை என்றும் தெரிகிறது.

இராக்கில் கலகம் நடந்ததால் பிரிட்டனுடைய கடல் வழிகள் ஒன்றும் பாதிக்கப்படவில்லை. பாரசீக வளைகுடா பிரிட்டிஷார் ஆதிக்கத்திலிருக்கிறது; அங்கிருந்து பாக்தீனுக்கும், அராபிய எண்ணெய்ச் சாலைகளுக்கும் போகலாம். பஸ்ரா பிரிட்டன் கையிலிருப்பது முக்கியமான விஷயம். பாரசீக வளைகுடாவில் அபாதான் என்ற இரானியத் துறைமுகம் இருக்கின்றது. அதற்கும் பஸ்ராவுக்கும் 40 மைல் தூரம். ஒரு வருஷத்தில் சுமார் 1 கோடி டன் பெட்ரோல் எண்ணெய் எடுக்கப்படுகிறது. இவை எல்லாம் அபாதான் என்ற இடத்தில் தான் பரிசுத்தப்படுத்தப்படுகின்றன. அதே வருஷத்தில் இராக்கில் 40 லட்சம் டன் எண்ணெய் எடுக்கப்பட்டது. இந்த எண்ணெய் எல்லாம் பிரிட்டன் இழந்துவிட்டாலும், அது ஒரு பிரமாதமான நஷ்டமல்ல. ஆனால் அது ஹிட்லருக்குக் கிடைத்தால், அதை ஒரு பெரிய சௌகரியமாக உபயோகப்படுத்தக் கூடும். ஹிட்லருடைய நோக்கம் எகிப்தை ஜெயித்து, சூயஸ் கால்வாயைக் கைப்பற்றி, மத்தியதரைக் கடலிலிருந்து பிரிட்டனைத் துரத்தி விடவேண்டுமென்பது. இராக்கில் ரஷீத் அலியை எதிர்க்கும்படி செய்ததன் காரணம், எகிப்தில் உள்ள பிரிட்டிஷ் துருப்புகளைக் கலைப்பதற்காகவே. எகிப்தைப் பிடித்து, அலெக்சாண்டிரியா துறைமுகத்தைக் கைப்பற்றினால், மோசூலிலுள்ள எண்ணெய்க் கிணறுகள் ஹிட்லருக்கு ஒரு பெரிய பரிசு போலாகும். இராக்கிலிருந்து எண்ணெய் டிரீஸ்டுக்கும், ஜெர்மனிக்கும் போகுமானால், பிரிட்டனின் பொருளாதார முற்றுகை உடைந்துவிடும்.

ஆகையால், எகிப்தை வெற்றிகரமாகப் பாதுகாக்க வேண்டுமென்றும், அட்லாண்டிக் யுத்தமும், பிரிட்டன் யுத்தமும், எகிப்து யுத்தத்தைவிட மிக முக்கியமானவை என்று கூறுபவர்கள் விஷயம் அறியாமல் பேசுகிறார்களென்றும், ஹிட்லர் இராக்கில் செய்து வரும் முயற்சிகளைத் தடுத்து, எகிப்தைக் குறித்த நோக்கத்தைப் பிரிட்டன் எப்படியாவது தடுக்கவேண்டுமென்றும், இந்த யுத்தத்தின் உண்மையான முடிவு எகிப்து சண்டையிலிருக்கலாமென்றும், "மாஞ்செஸ்டர் கார்டியன்" பத்திரிகை கூறுகிறது.

## துருக்கியின் நிலை.

ரஷீத் அலி ஜெர்மனியின் உதவியை நாடியது துருக்கிக்குப் பிடிக்கவில்லை. ஏனென்றால், அப்படிப்பட்ட உதவி ஒருக்கால் வர நேர்ந்தால், துருக்கியைச் சுற்றி அச்சு வல்லரசுகளின் ஆதிக்கம் பரவி நிற்கும். இப்போது, இரான், துருக்கி, எகிப்து முதலிய மகம்மதிய நாடுகள் ரஷீத் அலிக்கு அனுதாபம் காட்டாமல், பிரிட்டனுக்கு ஆதரவு அளிக்கிறது. இந்தியாவிலுள்ள முஸ்லீம் தலைவர்களாகிய போபால் நவாப், சர் சிக்கந்தர் ஹயத் கான், சர் மகமது உஸ்மான் ஆகியவர்கள் ரஷீத் அலியின் செய்கையை ஆதரிக்கவில்லை. ரஷித் அலி தோல்வி அடைவது மிக நிச்சயம். பிரிட்டனும் இந்தியாவும், இராக்கின் தொந்தரவு சீக்கிரத்தில் முடிந்து விடும் என்று எதிர்பார்க்கலாம்.

---

# ருஷ்யாவுக்கும், ஜெர்மனிக்கும் அபிப்பிராய பேதம்.

## ஸ்டாலின் முதல் மந்திரியான மர்மம்.

ருஷ்யாவுக்கும், ஜெர்மனிக்கும், ஒரு வியாபார ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அதன்படி ருஷ்யா ஜெர்மனிக்கு சில சாமான்கள் கொடுக்கவேண்டும்; ஆனால் கொடுக்கவில்லை. அந்த சாமான்கள் இன்னின்னவை என்றும், அவைகளுக்குப் பணம் இவ்வளவு கொடுக்கவேண்டுமென்றும், ஜெர்மனி முடிவு செய்து, அவைகளைத் தனக்குக் கொடுக்கும்படி, ருஷ்யாவைக் கேட்கப்போகிறதாம். ஜெர்மன் வியாபார இலாகாவின் தலைவர், மாஸ்கோ (ருஷ்யாவின் தலைநகரம்) வுக்குச் சென்றிருக்கிறார். ஜெர்மனி கேட்டதை எல்லாம் கொடுக்கவேண்டும்; இல்லாவிட்டால் ருஷ்யாவுக்கு எதிரிடையாகச் சில காரியங்கள் செய்யப்படுமாம். ருஷ்யாவின் எல்லையோரத்தில், ஜெர்மனியில் யுத்த முஸ்தீப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன; ருஷ்யாவைப் பயப்படுத்தவேண்டுமென்பது ஜெர்மனியின் நோக்கம். பால்டிக் நாடுகளிலும், யூக்ரெயின் பிரதேசத்திலும், ருஷ்யாவுக்கு விரோதமான பொம்மை அரசாங்கங்கள் ஏற்படுத்துவதற்கு, ஜெர்மனி முயற்சி செய்துகொண்டிருக்கிறது. பால்டிக் கடலிலிருந்து கருப்புக்கடல் வரைக்கும், 90 ஜெர்மன் படைகள் நீண்டதூரம் பரப்பப்பட்டிருக்கின்றன. நார்வேயிலிருந்து பின்லாந்துக்குப் பல ஜெர்மன் துருப்புகள் அனுப்பப்பட்டன. ஜெர்மனிக்கு ருஷ்யாவின் செழிப்பான மாகாணமாகிய யூக்ரெயினைக் கைப்பற்றவேண்டுமென்று ஆசை. அதலலாமல் பெட்ரோல் எண்ணெயும் அதிகமாகவேண்டி

யிருக்கிறது. ஆகையால், ருஷ்யாவைச் சிலசாமான்கள் கொடுக்கும்படி கேட்டு, ருஷ்யா கொடுக்காவிட்டால் அதன்மேல் போர் தொடுக்கலாம் என்பது ஜெர்மனியின் நோக்கம். அம்மாதிரி இப்போது ஜெர்மனி செய்யுமா ?

யூக்ரெயின், போலந்து, எஸ்தோனியா முதலிய பிரதேசங்களில் உள்ள துருப்புகளுக்கு அதிகமான உதவித் துருப்புகள் அனுப்பப்படுகின்றன என்று தெரிகிறது. ட்நீஸ்டர், புருத் என்ற நதியோரங்களில் லோ, ஒடெஸ்ஸா என்ற இடங்களில் 65 பெரும் படைகள் தயாராக இருக்கின்றனவென்றும், 700 வெடிகுண்டு விமானங்களும், துரத்திச்செல்லும்விமானங்கள் அநேகமும் கொண்டுவரப்பட்டிருக்கின்றனவென்றும் தெரிகிறது. எஸ்தோனியாவிலும், பின்லாந்து வளைகுடாவிலும் ராணுவ முஸ்தீப்பு ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால் இவையெல்லாம் உண்மையல்ல என்று மாஸ்கோ கூறுகிறது. ருஷ்யப் பிரதேசங்களின் வழியாக யுத்த சாமான்கள் அயல்நாட்டினர் கொண்டு செல்லக்கூடாதென்று ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இந்த சந்தர்ப்பத்தில், மாலதோவ் ஏன் முதல் மந்திரி வேலையிலிருந்து நீக்கப்பட்டார், ஏன் ஸ்டாலின் முதல் மந்திரி பதவியைத் தானே வகித்தார் என்ற கேள்விகள் உலகம் முழுவதும் கேட்கப்படுகின்றன. ருஷியாவின் அயல்நாட்டுக் கொள்கையில் இதனால் யாதொரு மாறுதலும் இல்லை என்று மாஸ்கோ கூறுகிறது. ஆனால் இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில, இப்படிப்பட்ட மாறுதல் உண்டானதற்குத் தகுந்த காரணம் இருக்க வேண்டும். முன்பு மேல் நாட்டு வல்லரசுகளோடு இருந்த தொடர்பை நீக்கி விட்டு, ஜெர்மனியோடு ஒப்பந்தம் செய்துகொண்டபோது, லிட்வினேப் மந்திரி பதவியிலிருந்து நீக்கப்பட்டார். இப்போது, மாலதோவ் முதல் மந்திரி பதவியிலிருந்து விலக்கப்பட்டதற்கும் காரணம் இருக்கவேண்டும். ஒருக்கால், ஜெர்மனியுடன் நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தை மாலதோவ் வற்புறுத்தியிருக்கலாம். ஆனால், ஸ்டாலின், அவசரப்படாமல், சாவதானமாகப் பொறுத்துப் பார்த்து, ருஷ்யாவை எந்த சங்கடத்திலும் சிக்கவைக்காமல் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கலாம். ஜெர்மனி இப்போது செய்யும் தொந்தரவுகளினால், ருஷ்யா சீக்கிரம் முடிவான ஏற்பாடுகளில் இறங்கவேண்டியிருக்கும்; அப்போது ஸ்டாலின் பெயரளவோடு மாத்திரமல்லாமல் உண்மையிலும் ருஷ்யாவின் முதல் மந்திரியாயிருந்துகொண்டு, வெளிப்படையாக முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டால், பல விஷயங்களுக்குச் சௌகர்யமாயிருக்கும்.

ஆனால் மற்றொரு வதந்தி உலவுகிறது. ஸ்டாலினுக்கும், மாலதோவுக்கும் பலத்த அபிப்பிராய பேதம் உண்டானதாகவும், அதனால் அரசியலில் ஒரு நெருக்கடியான நிலைமை ஏற்படும்போல் தோன்றினதென்றும், அதை மாற்றுவதற்காகவே ஸ்டாலின் தானே முதல் மந்திரியானாரென்றும் ஒரு செய்தி கூறுகிறது. இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில், ஜெர்மனி ருஷ்யாவைப் பயமுறுத்தும் நிலைமையில், தான் முதல் மந்திரியாயிருந்தால், எல்லாம் நன்றாக நடைபெறும் என்ற பூரண நம்பிக்கை ஸ்டாலினுக்கு இருப்பதாகத் தெரிகிறது. அமெரிக்கா இப்போது யுத்தத்தில் ஏறக்குறைய ஈடுபட்டு விட்டதென்று சொல்லும் நிலைமையில் இருக்கிறது; இந்தப் புதிய எதிரியை எதிர்த்துப் போர் செய்ய ஜெர்மனி தன் முழு கவனத்தையும் செலுத்தவேண்டும்; அப்போது ருஷ்யா சண்டைபோட வேண்டிய அவசியமிருக்காது; இப்போதிருப்பதுபோல நடுநிலைமை நாடாக இருக்கலாம. இந்த எண்ணம் ஸ்டாலினின் மனோதைரியத்துக்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

## மிஸ்டர் ஸ்டிம்சனின் அருமையான பிரசங்கம்.

அமெரிக்காவில் யுத்த மந்திரி, மிஸ்டர் ஸ்டிம்சன், சென்ற வாரம் ஒரு அருமையான ரேடியோ பிரசங்கம் செய்தார். அதில் ஜெர்மனியின் கொள்கைகளைக் கண்டித்து, பிரிட்டனின் யுத்த முயற்சியைப் பாராட்டி, அமெரிக்கா பிரிட்டனுக்குப் பூரண உதவி அளிக்க வேண்டுமென்பதை வற்புறுத்திப் பேசினார். அவர் கூறியதில் சில குறிப்புகள் கீழே தரப்படுகின்றன :—

“ஜெர்மனிக்குள்ளும், வெளியிலும், ஹிட்லருடைய கொள்ளைக்கூட்டத்தினர் கால முன்னேற்றத்தை, ஐந்து நூற்றாண்டுகளுக்குப் பின்னால் திருப்பி வைத்துவிட்டார்கள்.

“சுதந்தரம் உலக முழுவதற்கும் அடிப்படையான கொள்கையாக வரும் சமயத்தில், நாஸிகள் கிளம்பி அதை வீழ்த்தி அழித்தார்கள். தாங்கள் அரசாளுபவர்கள், மற்றவர்கள் அடிமைகள் என்ற கொள்கையுடன் உலகத்தையே அடிமைப்படுத்தப் பார்க்கிறார்கள்.

“தென் அமெரிக்காவிலுள்ள குடியாட்சிகளுக்குள் நாஸிகளின் ‘ஏஜண்டு’கள் சுறுசுறுப்பான வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். தெற்கேயிருந்து பனாமா கால்வாய் வரைக்கும் ஆகாய விமானத் தளங்கள் ஏற்படுத்த வேண்டுமென்பது அவர்கள் நோக்கம்.

“பிரிட்டனின் உயிர் நிலையான அட்லாண்டிக் கப்பற் பாதைக்குத் தீங்கு நேரும்போலிருக்கிறது. நாஸிகளுடைய பெருமுயற்சி பிரிட்டனுக்கு உதவி கொண்டுபோகும் கப்பல்களைத் தாக்குவதுதான். அமெரிக்காவின் கப்பற்படை அட்லாண்டிக் கடலைப் பாதுகாத்து, அமெரிக்கா அனுப்பும் யுத்த ஆயுதங்கள் பிரிட்டனுக்குச் சேரும்படி செய்தால், அமெரிக்கா தனக்குத்தானே உதவி செய்வதோடுகூட, அமெரிக்காவின் சுதந்தரத்தைக் காப்பாற்றியதுமாகும்.

“பிரிட்டிஷ் கப்பற்படைப் பலம் முறிந்து விழும் வரை நம்முடைய (அமெரிக்காவின்) கப்பற்படை உதவியைக் கொடுக்காமல் வைத்திருந்தால், அதற்குப்பின் இது பிரயோசனமற்றதாய் விடுகிறது. இந்த நெருக்கடியான நிலைமையில், தாம் உதவி செய்யாமல் பிரிட்டிஷ் கடற்பலம் அழிந்துபோனால், நம்முடைய கப்பற்படை இரண்டாந்தரக் கப்பற்படையாய்விடும். ஆனால் இப்போது உதவி செய்தால், உலகப் போராட்டத்தில் முடிவான வெற்றி பெறுவதற்கு நமது பலம் உபயோகப்படும்.

“நாம் இந்த சந்தர்ப்பத்தில் தியாகம் செய்வதற்குத் தயாராயிருக்கவேண்டும்; நம்முடைய கொள்கைகளுக்காக உயிரையும் தத்தம் செய்யத் தயாராயிருக்கவேண்டும். அப்போதுதான் அமெரிக்கா கடைத்தேறும். இல்லாவிட்டால் கடைத்தேறாது.”

மிஸ்டர் ஸ்டிம்சனுடைய பேச்சு, சுதந்தரத்தை விரும்பும் எல்லோராலும் வரவேற்கப்பட்டது. இனிமேல் அடுத்ததாக, அமெரிக்கா யுத்தத்தில் இறங்கும்படியான நிலையில் வந்துவிட்டதென்ற அபிப்பிராயம் பலப்பட்டது. அமெரிக்காவின் யுத்த மந்திரி பேசியதை அமெரிக்காவின் கப்பற்படை மந்திரி, கர்னல் நாக்ஸ், ஆதரித்திருக்கிறார். “மிகுந்த தேசாபிமான உணர்ச்சியுடன், தைரியமும், அறிவூட்டுவதுமான பேச்சு” என்று அதைப் பாராட்டிக் கூறியிருக்கிறார்.

மிஸ்டர் ஸ்டிம்சனின் பேச்சுக்குப்பிறகு, பிரசிடெண்டு ரூஸ்வெல்ட் என்ன சொல்லப்போகிறார் என்று அறிய உலகம் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. ஆனால் சென்ற புதன்கிழமை அகில அமெரிக்க மகாநாட்டில் பேசவேண்டிய ஏற்பாட்டை, பிரசிடெண்டு ரத்து செய்துவிட்டார். கார்டல் ஹல், கர்னல் நாக்ஸ், ஸ்டிம்சன், வெண்டல் வில்கி முதலிய அமெரிக்கத் தலைவர்கள் பிரிட்டனுக்குக் கடற்படை உதவி செய்வதன் அவசியத்தை வற்புறுத்திக் கூறினார்கள். அதற்குப்பின் தான் பேசினால், முடிவான அபிப்பிராயம் கூற வேண்டிவரும் என்று நினைத்து சென்ற புதன்கிழமை அவர் பேசவில்லை.

மிஸ்டர் ஸ்டிம்சனின் பேச்சுக்குப் பிறகு, ஜப்பானிய அயல் நாட்டு மந்திரி, மிஸ்டர் மத்சூகா ஒரு பத்திரிகை நிருபருக்களித்த பேட்டியில், ஒரு பயமுறுத்தல் செய்திருக்கிறார். அமெரிக்கா. ஜெர்மனிக்கு எதிராக யுத்தத்தில் ஈடுபடுமானால், ஜப்பான் அமெரிக்காவோடு போர் தொடுக்க நேரிடும் என்று அவர் கூறியிருக்கிறார்.

## அமெரிக்கா செய்யும் பேருதவி.

### பாதி அட்லாண்டிக் கடலில் பாதுகாப்பு.

அமெரிக்கக் கடற்படை மந்திரி, கர்னல் நாக்ஸ் சென்ற திங்கட்கிழமை பேசும்போது, அமெரிக்கா மூன்று காரியங்களைச் செய்யலாம் என்று கூறினார். முதலாவது, யுத்தத்தில் ஈடுபட்டு எதேச்சாதிகார எதிரியை அழிக்க முயல்வது; இரண்டாவது, போரிடும் உலகத்திலிருந்து தனிப்பட்டு நிற்பது; மூன்றாவது, எதிரிக்குச் சரணமடைவது. இந்த மூன்றில் முதலாவதுதான் அமெரிக்கா செய்யவேண்டிய காரியம் என்று கர்னல் நாக்ஸ் கூறினார்.

அமெரிக்கா இப்போது செய்துவரும் சில யுத்த உதவிகளைக் குறிப்பிடலாம். செங்கடல் வழியைக் காப்பதற்காக, ஒரு அமெரிக்கக் கப்பற்படை இந்திய சமுத்திரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. வாடகை—கடன் மசோதாவின் கீழ் அனுப்பப்படும் சாமான்களைச் செங்கடலுக்குக் கொண்டுபோவதற்காக 50 பெரிய கப்பல்கள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. அமெரிக்கக் கடற்கரையிலிருந்து 2,000 மைல் தூரம், நடுநிலைமைப் பாதுகாப்புக் கப்பல்கள் வேலை செய்கின்றன. இந்த விஸ்தீர்ணம் அட்லாண்டிக் கடலில் பாதியாகும். எதிரிகளின் சண்டைக் கப்பல்கள், சப்மரீன்கள், ஆகாய விமானங்கள், இருப்பதைக் கண்டுபிடித்து, பிரிட்டிஷ் கப்பல்களை எச்சரிப்பதுதான் நடுநிலைமைப் பாதுகாப்புக் கப்பல்கள் செய்யும் வேலை. இது பிரிட்டிஷ் கப்பல்களுக்கு அமெரிக்கா செய்யும் விலைமதிக்கவொண்ணாத பேருதவி. இதற்கு அடுத்த உதவி ''கான்வாய்'' என்ற துணைக் கப்பல் உதவி. அந்த உதவி கொடுப்பதற்கு அமெரிக்கா இசைந்தால், பிரிட்டிஷ் கப்பல்கள் தாக்கப்பட்டால் அமெரிக்க யுத்தக் கப்பல்கள் சும்மா பார்த்துக்கொண்டிருக்க முடியாது. சண்டையில் ஈடுபட நேரும். அதனால் உண்டாகும் பலாபலன்களுக்கு அமெரிக்கப் பொது மக்கள் தயாராயிருக்கிறார்களா என்பதை சந்தேகமில்லாமல் அறிவதற்குத்தான், பிரசிடெண்டு ரூஸ்வெல்ட் நிலைமையை இப்போது கூர்மையாக கவனித்து வருகிறார்.

## ஜெர்மனியை விட்டுத் தப்பிஓடிய நாஸித்தலைவர்!

### ஹெர் ஹெஸ் ஸ்காட்லந்து சென்றார்.

தைரியத்தை விட புத்திசாலித்தனம் தான் மேலானது என்ற எண்ணத்துடன், ஹிட்லரின் சகாவான ஹெர் ஹெஸ் என்பவர் பிரிட்டனில் வந்து புகலிடம் தேடியிருக்கிறார். நாஸிக்கட்சித்தலைவர்களில் இவர் மூன்றாவது ஸ்தானத்திலிருப்பவர் ஹிட்லரின் அந்தரங்க நண்பர்; ஜெர்மானிய மக்களிடம் நன்மதிப்புப்பெற்றவர்; ஹிட்லரின் சரித்திரமாகிய ''மீன்காம்ப்''பின் சிலபாகங்களை ஹிட்லர் சொல்லச்சொல்ல எழுதியவர். அப்படிப்பட்டவர் திடீரென்று ஆகாயவிமானத்திலேறி, ''பாரஷுட்'' என்ற ஆகாயவிமானக்குடை மூலம் கீழிறங்கி, சென்ற சனிக்கிழமை, மே மீ 10உ ஸ்காட்லந்து தேசத்தை அடைந்தார். ஜெர்மனியிலிருந்து ஏன் இவர் தப்பியோடிவந்துவிட்டார்?

ஹெஸ்ஸுக்கு மூளைக்கோளாறு ஏற்பட்டிருக்கிறதென்று ஜெர்மானியர்கள் கூறுகிறார்கள். பிரிட்டனுக்கும், ஜெர்மனிக்கும் சமாதான உடன்படிக்கை செய்யவேண்டுமென்ற எண்ணம் அவருக்கு இருந்ததாகவும் சொல்லப்படுகிறது ஹெஸ்ஸைப் பரிசோதித்த ஆங்கில டாக்டர்கள் அவருடைய மூளையில் யாதொரு கோளாறும் இல்லை என்று கூறியிருக்கிறார்கள். இதெல்லாம் நாஸிகளுடைய தந்திரமாயிருக்கலாம் என்று கூட சந்தேகிக்கலாம். ஆனால், ஹிட்லருக்கும், ஹெஸ்ஸுக்கும் சண்டை நடந்திருக்கவேண்டுமென்றும், ஜெர்மனியில் இருந்தால் உயிருக்கு அபாயம் நேரும் என்று நினைத்து பிரிட்டனுக்குத் தப்பியோடி வந்திருக்க வேண்டுமென்றும் யூகிக்க இடமிருக்கிறது.

ஹெர் ஹெஸ் இங்கிலாந்தில் ஒரு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார். அவர் தப்புவதற்காக உதவிசெய்தவர்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்கள் ஜெர்மனியில் கைது செய்யப்பட்டார்கள்.

பின்னால் வந்த செய்திகளிலிருந்து, ஹெஸ் ஸ்காட்லாந்துக்குப்போன காரணம், தன்னுடைய பழைய நண்பரான ஹாமில்டன் டியூக்கைக்கண்டு பேசி, ஜெர்மனிக்கும், பிரிட்டனுக்கும் சமாதானம் ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கம்தான், என்று தெரிகிறது. இந்த விபரம் ஜெர்மனியில் ஹெஸ் வைத்திருந்த சில தஸ்தாவேஜுகளிலிருந்து தெரிய வருகிறது என்று ஜெர்மனியின் அறிக்கை கூறுகிறது.

ஸ்காட்லந்தில் உள்ள ஹாமில்டன் டியூக்கின் வீட்டிற்கருகில் தான் ஹெஸ் ''பாரஷுட்'' டிலிருந்து இறங்கினார். இறங்கினவுடன் டியூக்கின் மாளிகைக்கு வழி எது என்று கேட்டார். ஹெஸ் கொண்டுவந்திருந்த பூகோளப்படத்தில், ஜெர்மனியிலிருந்து ஸ்காட்லாந்துக்கு வழியும், ஹாமில்டன் டியூக்கின் வீடும், நீலப்பென்சிலால் அடையாளமிடப்பட்டிருக்கிறது. ஜெர்மனியில் குடியானவர்கள் படுங்கஷ்டங்களைப்பற்றியும், பிரிட்டிஷ் விமானப்படை செய்த சேதத்தைப்பற்றியும், ஹெஸ் கூறினாராம். ஜெர்மனியில் இருக்கும் கொடுங்கோன்மையை எப்படி ஒழிப்பதென்பதைப் பற்றிவேண்டிய விவரங்களை, ஹாமில்டன் டியூக்குக்குச் சொல்ல விரும்பியதாக ஹெஸ் கூறியிருக்கிறார். ருஷ்யாவுக்கும், ஜெர்மனிக்கும் உள்ள தொடர்பைப்பற்றி, ஹிட்லருக்கும், ஹெஸ்ஸுக்கும் உண்டான அபிப்பிராயபேதம்தான், ஹெஸ் ஸ்காட்லாந்துக்கு ஓடிவந்ததன் காரணம் என்று சொல்லப்படுகிறது. ஹெஸ் ஹாமில்டன் டியூக்கைப் பார்த்தாரென்றும், அவர்கள் இருவரும் பேசும்போது அரசாங்க உத்தியோகஸ்தர்கள் இருந்தார்களென்றும் தெரிகிறது.

## ஆப்பிரிக்காவில் யுத்தம்

இந்தியத் துருப்புகளும், தென்னாப்பிரிக்கத் துருப்புகளும் முன்னேறிச் சென்று, அபிசீனியாவில் இத்தாலியின் கடைசிக் கோட்டையான அம்பா அலகியை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றன; லிபியாவில் பிரிட்டிஷ் துருப்புகளின் முயற்சி தோப்ரூக் பிரதேசத்தில் பயனளித்துக் கொண்டுவருகிறது; இவைகள் ஆப்பிரிக்காவில் இந்த வாரம் நடந்த யுத்தத்தின் முக்கிய அம்சங்கள். லிபியாவில் இருக்கும் நிலைமை மாறியதற்குக் காரணம், பிரிட்டிஷ் கப்பற்படை தரைப்படைகளுக்கு உதவி செய்வதற்கு அதிக சௌகரியம் இருந்ததால்தான் என்று ஜெனரல் பிளேமி கூறுகிறார். கிரீசை விட்டு வந்தால், லிபியாவில் பூரண கவனம் செலுத்துவதற்கு வசதி ஏற்பட்டது. இதல்லாமல், பகைவர்களுடைய துருப்புகள் மிகுந்த கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டிருக்கின்றன. உணவுப் பொருள்கள் முதலியன சரியாக வந்து சேருவதில்லை. பாலைவன மணற்காற்று புயல் மழைபோல் அடிப்பதால், 'சப்ளை' சாமான்கள் வந்து சேருவது மிகவும் கஷ்டம். ஜெர்மானியர்களால் பாலைவன வெய்யிலைத் தாங்க முடியவில்லை.

இந்தியத் துருப்புகள் அபிசீனியாவில் பெற்ற வெற்றிகளைப் பாராட்டி, அபிசீனியச் சக்கரவர்த்தி மிஸ்டர் சர்ச்சிலுக்கு அனுப்பிய தந்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றின்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.

[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS: PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.